# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 27 புதன்கிழமை 13.11.2024 கதிர் 416







## அமெரிக்கத் தூதரகத்தினால் பயணக் கட்டுப்பாடு நீக்கம்!

கொழும்பு, நவ. 13

இலங்கையின் கிழக்குக் கடற்கரையோரச் சுற்றுலா மையமான அறுகம்பை பகுதிக்கு செல்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

அறுகம்பை பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை குறிவைத்து சந்தேகத்துக்கிடமான செயற்பாடுகள் இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த மாதம் 23 திகதி அமெரிக்க தூதரகம் பயணக் கட்டுப்பாட்டை விதித்திருந்தது. அதன்படி அமெரிக்கப் பிரஜைகள் பொத்துவில் – அறுகம்பே கடற்கரைச் சுற்றுலா மையப்பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

தற்போது பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், இலங்கைக்கான பயண ஆலோசனைகளைப் புதுப்பிக்கவுள்ளதாக அமெரிக்க தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)


## வாக்களிப்புக்கு நாளை விடுமுறை

கொழும்பு, நவ. 13

அரச, தனியார் மற்றும் வங்கித் துறைகளில் பணிபுரியும் சகலருக்கும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேவையான விடுமுறையை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். அனைத்து வாக்காளர்களும் தங்களது இறையாண்மை அதிகாரத்தைப் பிரயோகிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்த வருடம் வாக்குரிமை பெற்ற அனைத்து உயரதரப் பாடசாலை மாணவர்களுக்கும் தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் அது தொடர்பில் மேலதிக வகுபுகளின்ஆசிரியர்கள்அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

## சர்வதேச கண்காணிப்பாளர் லெவிசேவ் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!




திருகோணமலை, நவ. 13

நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கென வந்துள்ள ரஷ்ய கூட்டமைப்பின் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரும், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளருமான மான லெவிசேவ் நிகோலே கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்று காலை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த லெவிசேவ், கடந்த ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளராகக் கலந்து கொண்ட இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவின் அழைப்பின் பேரில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளராக இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்கவுள்ளதாகவும், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் என்ற வகையில் பல நாடுகளின் தேர்தல்களை அவதானித்துள்ளதாகவும், இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தேர்தல் சட்டம் எந்தளவிற்கு பொருத்தமானது என்பதை அவதானிப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று காலை திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியதுடன், பாராளுமன்ற தேர்தல் உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டு விநியோகத்தை அவதானித்ததுடன் தேர்தல் நிறைவடைந்த பின்னர் சர்வதேச பார்வையாளராக தேர்தல் தொடர்பான அவதானிப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ஐ-97)

## முன்னாள் அமைச்சர்களின் வீடுகளின் காவல் கடமையில் இராணுவத்தினர்!

கொழும்பு, நவ.13

முன்னாள் அமைச்சர்களின் பாவனையிலிருந்தஉத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர், மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின், உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் உரித்துடையவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்தப் பாதுகாப்பு திட்டம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-03)

## தேர்தல் மத்திய நிலையங்களில் இருந்து பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு




யாழ்ப்பாணம், நவ. 13

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் பணிகள் இன்று காலை ஆரம்பமாகியது.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வைத்து அந்தந்த வாக்களிப்பு நிலைய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. அவை மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

2➤

## வன்னியில் இதுவரை 107 விதி மீறல்கள்

### மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு



வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 107 தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக என்று வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா மாவட்ட அரச அதிபருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிகையில், "எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 பேரும், மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 பேருமாக 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வவுனியாவில் 152, முல்லைத்தீவில் 137, மன்னாரில் 98 வாக்களிப்பு நிலையங்களுமாக

2➤

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)



யாழ்ப்பாணம்




திருகோணமலை


கிளிநொச்சி




வவுனியா

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகளை எடுத்து செல்வதற்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டத்தெரிவத்தாட்சி அலுவலரும், பதில் அரசாங்க அதிபருமான ம. பிரதீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் இருந்து இன்று காலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், பதில் அரசாங்க அதிபருமான எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்புப் பணியில் பொலீஸாருக்கு மேலதிகமாக பொலீஸ் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குத் தேவையான வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளுக்காக வன்னியில் 4 ஆயிரத்து 995 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 3 ஆயிரத்து 898 பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை தேர்தல் விதிமீறல் தொடர்பில் 107 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் வவுனியா மாவட்டத்தில் 50 முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 22 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன. அத்துடன், வவுனியா மாவட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், மன்னார் மாவட்டத்தில் மாவட்ட செயலகமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலமும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாகச் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன." - என்றார். (ஐ-05)




யாழ்ப்பாண தமிழ் சங்கத்தினருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்குமிடையிலான நல்லெண்ண சந்திப்பொன்று இன்று காலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது தமிழ்ச் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செயலாளர் ச. லலீசன் மற்றும் விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா ஆகியோர் கலந்து கொண்டனர். சந்திப்பின் அடையாளமாக முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரைநூல் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# தெஹிவளையில் சிவப்பு நிறமாக மாறிய கால்வாய் – விசாரணையில் தகவல்



கொழும்பு, நவ. 13

தெஹிவளை, கவுடானை பகுதியில்அத்திடிய கால்வாய் ஊடாக செல்லும் நீரில் பெயின்ட் கலந்த நீரை விடுவித்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கால்வாயில் இரசாயனம் கலந்துள்ளதால் கால்வாய் முழுவதும் சிவப்பு நிறமாக மாறியுள்ளதாக கடந்த வாரம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் பிரதேசவாசிகள் பொலிஸ் சுற்றாடல் பிரிவு மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு சொந்தமான தொழிற்சாலையில் இருந்து சிவப்பு நிற பெயின்ட் பீப்பாயை அகற்றுமாறு சில தரப்பினர் பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய, குறித்த பீப்பாய்களை தனது வீட்டிற்கு எடுத்துச் சென்று வைத்திருந்த நிலையில், கடந்த சில நாட்களாக பெய்த மழையால் அவை பொங்கியுள்ளது.

இந்நிலையில் குறித்த பெயின்டுகளை கால்வாயில் விடுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக கால்வாயில் சுமார் மூன்று நாட்களாக தண்ணீர் சிவப்பு நிறமாக மாறியதாக கூறப்படுகிறது.

பிரதேசவாசிகள் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது, சந்தேகநபருக்கு 25,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், நீதவான் அவரை கடுமையாக எச்சரித்துள்ளார். (ஐ)

# மத்திய வங்கி ஆளுனர், நிதி அமைச்சின் செயலாளர் குறித்து அநுரவின் நிலைப்பாடு

கொழும்பு, நவ. 13

இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் மீதான விமர்சனங்களில் மாற்றமில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் இந்த இருவர் மீது குரோதங்கள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதிக் கொள்கைகள் தொடரபில் அவர்கள் மீது அன்று முன்னெடுக்கப்பட்ட விமர்சனங்களில் மாற்றமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு பதவிகளையும் அவசரமாக மாற்றுவது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனால் பதவி மாற்றம் செய்யவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் சிக்கல் மிகுந்த பாதையில் பயணிப்பதாகவும் இதனால் அதற்கு தலைமை தாங்கிய பிரதான அதிகாரிகளுடன் பயணிப்பதே பொருத்தமானதாக அமையும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடு மற்றும் மக்களின் சார்பில் எடுக்கப்பட்ட சரியான தீர்மானமாக இதனைக் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி சேவை யொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரி வித்துள்ளார். (ஐ)






# மிதி வெடி

நாளைக்கு விடிஞ்சா நாட்டில கொண்டாட்டம்... சொல்ல வேண்டியதை இண்டைக்கே சொல்லிப் போடவேணும்...

நாளைக்குப் பிறகு ஒருத்தரையும் பிடிக்கேலாது பாருங்கோ... “பார்ளிமென்ற்” போறவை போக மிச்ச ஆக்கள் எல்லாம் தன், தன் பாட்டில போயிடுவினம் தானே?

மூலைக்கொண்டா முளைச்சிருந்த “சுய இச்சை”கள் எல்லாம் தங்கட சுய சம்பாத்தியம் தேடிப் போயிடுவினம். வெளிநாட்டுக் காசில கேட்டவயளும், முதலையளிண்ட “அஜென்டா”க்கு ஆடினவையும் எரியுற வீட்டில புடுங்கினது லாபம் எண்டு மாப்போல மிஞ்சுறதுகளோட “அட்ரஸ்” இல்லாமல் போயிடுவினம்.

கனடாவுக்கு “விசிற்” விசாவில போயிற்று, விடுமுறை போல இங்க வந்து “எலக்ஷன்” கேட்ட ஆக்களும் மறுபடி கனடா யோயிற்று “அசைலம்” கேட்டுடுவினம். பாவம் அவையள நம்பி பெயர் குடுத்ததுகள் ன் நடுத்தெருவில நிக்கபோகுதுகள்.

உங்களுக்கொண்டு தெரியுமே?

ஒருகாலத்தில “கம்பஸ்” காரர் கதை சொன்னா எங்கட சனம் அப்பிடியே கேட்டதுகள். இப்ப அவை தங்கட பாடு, சனம் எங்கட பாடு.

“கம்பஸ்”ல படிக்கிறவையா இருந்தாலும், படிப்பிக்கிறவையா இருந்தாலும் “படிச்சவை சொல்லினம்” எண்டு வேத வாக்கா அதை நம்பினது ஒருகாலம். இப்ப இவைக்குள்ளயே ஒற்றுமை இல்லை, அதுக்குள்ள எங்களுக்கச் சொல்ல வந்துட்டினம் எண்டு சனம் காறித் துப்புதுபாருங்கோ...

போன முறை ஜனாதிபதித் தேர்தல் நேரம் உங்க “கம்பஸ்” காரர் கொஞ்சப்பேர் கட்சியின்ர பேரைச் சொல்லாமல் அறிக்கை விட்டு வாங்கிக் கட்டினவை தானே? அதை மாதிரித் தான் இந்த முறை “பார்ளிமென்ற்” தேர்தலுக்கும் வெளிக்கிட்டிக்கினம். ஆனா இந்த முறை கட்சி ஒண்டுண்ட பேரைச் சொல்லித் தான் செய்யினமாம்.

அவை அப்பிடி வெளிக்கிட்டதுக்குப் பிறகு தான் அங்கினேக்க நிறையக் கதை வருகுது. போன மாசம் ரெண்டு பெரிய ஆசிரியர் மார் கட்சியில “மெம்பர்” ஆகினவையாம். “மெம்பர்” ஆகின “மீற்றிங்”ல ரெண்டு பேருக்கும் கடும் வரவேற்பாம்... புலமையாளர்கள் எங்கட கட்சியில சேருறது எங்களுக்கப் பெருமை தானே எண்டு கொண்டடிச்சினமாம்.

அந்த மீற்றிங் முடச்சு வெளிக்கிடேக்க ரெண்டு பெரியவையும் ஆளுக்கொரு கடிதம் குடுத்து விட்டவையாம்... அது என்னெண்டு தெரியுமே? தங்கட “கம்பஸ்”ல தாங்கள் கெத்தா நடக்கிறதுக்கு ஏற்ற மாதிரி ஆரைக் “கவுன்சில் மெம்பர்” ஆ கொண்டு வரவேணும் எண்டதில இருந்து, அதிகாரத்தில இருக்கிறவரை அப்புறப் படுத்தி விடுங்கோ எண்டுறது வரையும் ஓராளிண்ட வேண்டுதல்.

மற்றவர் என்னெண்டா, “கவர்ண்மென்ட்” அமைச்சதும் தான் “செபாட்டிகல்” லீவில வேலை செய்யக் கூடிய மாதிரி அதிகார சபை ஒண்டில “அப்பொய்ன்ற்மென்ற்” தரச் சொல்லி விண்ணபிச்சவராம்....

அப்பப் பாத்தியளே ஆரில ஆருக்கு அக்கறை எண்டு... உதைத் தான் சொல்லுறது பாருங்கோ “சோழியன் குடுமி சும்மா ஆடாது” எண்டு.

படிப்பிக்கிறவை இப்பிடியெண்டா, அவையளிட்ட படிக்கிறவை எப்பிடி இருப்பினம்? “கம்பஸ்” பெடியளெண்டா நெருப்பு மாதிரி. ஒண்டுக்கும் அஞ்சாங்கள் பாருங்கோ எண்டு நாங்கள் மூக்கில விரலை வைச்சுப் பாத்தளவுக்கு இங்க உயிரைத் துச்சமாய் மதிச்சு நிண்டு போராடின ஒன்றியக்காரில முக்கால் வாசிப்பேர் கனடாவில தஞ்சம் கோரி இருக்கினமாம். இங்க ஆர்ப்பாட்டம், ஆரவாரம் எண்டு திரிஞ்சவை எல்லாம் அங்க “அசைலம்” கேட்டு கையைத் தூக்கிப் போட்டினமாம்...

உந்தச் சீத்துவக்கேட்டில உவை சொல்லுறதை நாங்கள் கேப்பம் எண்டு இனியும் எதிர்பார்க்க ஏலுமே?

–நரமுனி–

# சுற்று சூழல் பாதுகாப்பு

சுற்றுசூழல் என்பது சுற்றுப்புறத்தை சூழ்ந்துள்ள இயற்கை சூழலின் சிறப்பை குறிக்கிறது. சுற்றுசூழல் என்ற சொல்லை சமூக பொருளாதார சூழல் என்ற சொற்களுடன் ஒப்பிட்டு வேறுபாடு அறிந்து கொள்ளலாம். பல சமயங்களில் சூழல் என்ற சொல் இயற்கை சுற்றுசூழலையே சுட்டிக்காட்டும். சுற்றுசூழலை சூழ்மை என்றும் சொல்லலாம்.

நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்றப் பொருள்களின் தொகுப்பை தான் சுற்றுச்சூழல் என்கிறோம். பெருகி வரும் விஞ்ஞான வளர்ச்சியால் விளைந்த நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து பார்த்தால் நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகம் இருக்கின்றன.



பண்டைக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் நிறைந்த முழுமையான உணர்வைப் பெற்றிருந்தான். அவனிடம் தொலைநோக்குப் பார்வை, தன்னலமற்றத் தன்மை நிறைந்து தென்பட்டது. அதன் விளைவாய் நல்ல சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் அமைதியான அர்த்தமுள்ள வாழ்க்கையினை வாழ்ந்து காட்டினார்கள்.

இன்றைய நிலையில் மெய்ஞானம் விஞ்ஞானம் தலைதூக்கி நிற்கிறது. கேள்விகளே அறிவின் விழிப்புநிலை என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைதி காணாமல் போயிற்று. வெற்று ஆரவாரங்கள் தலை தூக்கியது. பொதுநலமற்ற தொலைநோக்குப் பார்வையற்ற சுயநலச் சமுதாயம் வேஷரூன்றி நிற்கிறது. அதன் விளைவாய் விளைந்ததுதான் இருபதாம் நூற்றாண்டு.

நில உயிரினங்கள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. நிலத்தில் கலக்கும் ஆலைக் கழிவுகளும், அணு கழிவுகளும், செயற்கை உரங்களும், பிற நச்சுப் பொருட்களும் நிலத்தின் தன்மையை மாற்றி விடுகின்றன.

இதன் மூலம் பூமியுடன் தொடர்பு கொள்ளும் உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. நிலத்தில் விளையும் காய்கறிகளில் இந்த நச்சுத் தன்மை படர்வதால் மனிதனின் உடலிலும் கலந்துவிடுகிறது. குழந்தைக்கு ஊட்டப்படும் தாய்ப்பாலில் கூட இந்த காய்கறிகளின் நச்சு கலந்திருப்பதாக மருத்துவ ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

தண்ணீரை மாசுபடுத்துவது என்பது நிலத்தடி நீரை மாசுபடச் செய்யும். தேங்கி நிற்கும் தண்ணீருக்கு சரியான வடிகால் வசதிகள் இல்லாமல் போவதால் தண்ணீர் மாசுபடுகிறது. உலக அளவில் உள்ள தண்ணீரில் 0.01 விழுக்காடு மட்டுமே நாம் பயன்படுத்தும் குடிநீர் ஆகும். அந்த தண்ணீரும் தற்போது குறைந்தும், மாசுபட்டும் வருவது உயிரினத்துக்கே கேடு விளைவிக்க கூடியதாகும்.

வீட்டுக் கழிவுகள், ஆலைக் கழிவுகள் என கழிவுகளை இரண்டாகப் பிரிக்கலாம். இதில் ஆலைக் கழிவுகள் பெரும்பாலும் நச்சுத்தன்மை உடையதாக இருக்கின்றது. மனித அலட்சியங்களினால் அசட்டை செய்யப்படும் கழிவுகள் ஏதோ ஒரு வகையில் மனிதனையே சென்றடைகிறது. கடலில் கொட்டப்படும் கழிவுகள் மீன்களின் வாயிலாகவோ, தரையை சேதப்படுத்தும் கழிவுகள் தானியங்களாகவோ, நீராகவோ காற்றில் கலக்கும் நச்சுகள் சுவாசம் வழியாகவோ ஏதோ ஒரு விதத்தில் மனிதனைச் சரணடைகின்றன.

ஒலி மாசு என்பது மனதிற்கு ஒவ்வாத இயந்திரங்கள் பிறப்பிக்கும் இரைச்சல் அல்லது ஒலியாகும், அது மனிதனின் வாழ்க்கை முறைகளையும், விலங்குகளின் வாழ்க்கை முறைகளையும், அவர்களின் செயல்பாடுகளையும் வெகுவாக பாதிக்கின்றது. பொதுவாக போக்குவரத்து நம்மை இக்காலத்தில் வெகுவாக பாதிக்கும் ஒலி மாசு குறிப்பாக தானுந்து, பேருந்து போன்ற மோட்டார் வாகனங்கள் ஆகும்.

அலுவலகங்களில் பயன்படும் கருவிகள், வாகனங்களின் ஹாரன் ஓசை, ஆலை இயந்திரங்கள், கட்டிட பணிகள், ஒளிபரப்பு கருவிகள், தரையை சுத்தம் செய்யும் இயந்திரங்கள், கருவிகள், மின் விசைகள், ஒலிபெருக்கி, மின்சார விளக்குகள் எழுப்பும் ஒலி, குரைக்கும் நாய்கள், ஆடல் பாடலுக்கான பொழுதுபோக்கு சாதனங்கள், மேலும் சத்தம் போட்டு பேசும் மனிதர்கள், ஆகியவை அனைத்தும் வீட்டின் உள்ளும், வீட்டின் வெளியேயும் இரைச்சல் உண்டாவதற்கான காரணிகள் ஆகும். பூமி, சூரியனிடமிருந்து ஆற்றலைப் பெறுகிறது. இது பூமியின் நிலப்பரப்பை வெப்பமாக்குகிறது. இந்த ஆற்றல் வாயு மண்டலத்தில் கடந்து செல்லும் போது, இதன் ஒரு குறிப்பிட்ட அளவு சிதறி போகிறது. பூமியிலிருந்தும், கடல் பரப்பிலிருந்தும் இந்த ஆற்றலின் ஒரு பகுதி, வாயு மண்டலத்திற்குள் பிரதிபலிக்கப்படுகிறது.

வாயுமண்டலத்தில் இருக்கும் சில குறிப்பிட்ட வாயுக்கள் பூமியைச் சுற்றி ஒரு விதமான போர்வை போர்த்தியது போன்று பரவியுள்ளன. அவையாவன, கார்பன்-டை- ஆக்ஸைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு. இவைதான் பசுமை இல்ல வாயுக்கள் (கிரீன் - ஹவுஸ் வாயுக்கள்) என்று அழைக்கப்படுகின்றன. பசுமை இல்ல (கிரீன்- ஹவுஸ்) வாயுக்கள், நீராவியுடன் சேர்ந்து வாயு மண்டலத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன. இவை வாயு மண்டலத்தில் பிரதிபலிக்கப்படுகிற ஆற்றலிருந்து சிறிதளவைக் கிரகித்துக்கொள்கிறது.

உயர்ந்து வரும் வெப்பநிலை, மழை பெய்யும் நிலவரங்களை மாற்றக்கூடியது. வறட்சி மற்றும் வெள்ளம் ஏற்படுதலை அதிகரிக்கச் செய்கிறது. பனிப்பாறைகள் மற்றும் துருவப் பனிப்படிவங்கள் உருகுவது அதிகரிப்பதால், கடல் மட்டம் அதிகரிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வரும் புயல், சூறாவளி போன்றவற்றுக்கும் வெப்பநிலை மாற்றங்களின் விளைவுகளே காரணம்.

கடல்நீர் வெப்பமடைதல், பனிப்பாறைகள் மற்றும் போலார் பனி படிவுகள் உருகுதளால், அடுத்த நூற்றாண்டுக்குள் சுமார் அரை மீட்டர் அளவுக்கு கடல் மட்டம் உயரப்போகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. கடல் மட்டம் உயர்வதால், மணல் அரிப்பு ஏற்பட்டு நிலப்பகுதிகள் கடலில் மூழ்குதல், வெள்ளப் பெருக்கு ஏற்படுவது அதிகரிப்பது, நீர்நிலைகள் உவர்ப்பாக மாறுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும். ஓசோன் படலம் : துருவப் பகுயில் வானில் விழுந்துள்ள ஓசோன் ஓட்டை இன்னொரு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது.

காற்றில் ஏற்படும் மாசு (குளோரோபுளூரோகார்பன்) இதன் முக்கிய காரணியாக விளங்கும் அதே நேரத்தில் குளிர்சாதனப் பெட்டி, தானியங்கி விற்பனை இயந்திரங்கள் போன்றவற்றிலிருந்து வெளியாகும் வாயுவும் இந்த ஓசோன் ஓட்டைக்கு குறிப்பிடத்தக்க காரணமாக விளங்குகிறது. புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படலம் வலுவிழப்பதால் தோல் புற்று நோய் உட்பட



பல்வேறு நோய்கள் மனிதனுக்கு வருகின்றன. கடலின் மேற்பரப்பில் வாழும் மீன்கள் அழிகின்றன.

நாம் இந்த உலகை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஐம்பெரும் பூதங்களுக்கும் கேடு விளையாத வண்ணம் நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். மனித இனத்தின் அறிவின் முதிர்ச்சியால் தாவரங்கள், பறவைகள், விலங்குகள், இயற்கையின் செல்வமாகிய காடுகள், ஆறுகள், அருவிகள், மலைகள் இவையாவற்றின் நலன் குறையலாம். நாம் இயற்கையைப் பாதுகாத்தால், நம்மையும் இயற்கை பாதுகாக்கும்.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்பது வேறுபாடுகளற்று மனிதகுலம் முன்னெடுத்துச் செய்ய வேண்டிய மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவற்றை தவறவிடும் ஒவ்வொரு தருணங்களிலும் பூமியின் ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும். அன்றாடம் நிகழ்த்தும் சிறு சிறு செயல்களின் மூலம் நமது சுற்றுப்புறத்தைக் காக்கும் கடமை நம் அனைவருக்கும் உண்டு.



*எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை அனுஷ்டிக்குமுகமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழுவின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பலர் இந்த சிரமதானத்தில் கலந்து கொண்டனர். (படங்கள் – வி.ரி. சகாதேவராஜா)*

# மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சக செயலாளருக்கு விடுக்கப்பட்ட உத்தரவு

கொழும்பு, நவ. 13

தனது செயல்களை நீதிமன்ற அவமதிப்பாக ஏன்கருதக்கூடாதுஎன்பதுகுறித்துவிளக்கமளிக்க, நவம்பர் 19ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது

முன்னணி பொறியியல் நிறுவனமான எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் சம்பந்தப்பட்ட வணிக பரிவர்த்தனைகளின் சட்டபூர்வமான தன்மையை சவால் செய்யும் மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணையின் போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 30.10.2024 திகதியன்று கடிதம் ஒன்றை அமைச்சின் செயலாளர் அனுப்பியதாகவும், அதில் நிறுவனத்தின் கணக்காய்வை நடத்துமாறு அறிவுறுத்தியதாகவும்குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் இந்தச் செயலை சாத்தியமான சட்ட மீறல் என்றும் அதனால் நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளதாக கருதியுள்ளதாகவும் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே தனது நடத்தையை நீதிமன்ற அவமதிப்பாக ஏன் கருதக்கூடாது என்பது குறித்து விளக்கமளிக்க, நவம்பர் 19ம் திகதி முற்பகல் 9:30 மணிக்கு செயலாளர் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

(ஐ)

## 8 பில்லியன் ரூபாய்கள் வரி நிலுவை:

# உரிமங்களை இழக்கப்போகும் மது உற்பத்தி நிறுவனங்கள்



கொழும்பு, நவ. 13

டபிள்யூ. எம். மென்டிஸ் அண்ட் கோ லிமிடெட் உள்ளிட்ட ஐந்து முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்கள், தமது மதுபான உற்பத்தி உரிமங்களை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2024 நவம்பர் 30 ஆம் திகதிக்குள், குறித்த நிறுவனங்களின் 8.5 பில்லியன் திரட்டப்பட்ட வரி நிலுவைத் தொகை தீர்க்கப்படாவிட்டால் இந்த ஆபத்தை குறித்த நிறுவனங்கள் எதிர்கொள்ளக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையில் மெண்டிஸ் நிறுவனமே ஆகக் கூடிய 5.5 பில்லியன் ரூபாய் வரியை செலுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

திறைசேரியின் அறிவுறுத்தல்களைத்தொடர்ந்து மதுவரித்திணைக்களம், இந்த மாத ஆரம்பத்தில், புதிய எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், நாட்டில் ஐந்து பெரிய அளவிலான மதுபானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், இந்த மாத இறுதியில் தங்கள் வரி நிலுவைத் தொகையை தீர்க்கவேண்டும் என்று நினைவூட்டப்பட்டுள்ளது.

களுத்துறையின் சினெர்ஜி டிஸ்டில்லரிகள், குருணாகலயின் வயம்ப டிஸ்டில்லரிகள், பின்லாந்து டிஸ்டில்லரீஸ், ஹிங்குரானா டிஸ்டில்லரீஸ் லிமிடெட் மற்றும் டபிள்யூ. எம். மெண்டிஸ் அண்ட் கோ என்பனவே இந்த நிறுவனங்களாகும்.

முன்னதாக ஆறாவது உற்பத்தியாளரான ரன்தெனிகல டிஸ்டில்லரிகளில் லங்கா (பிரைவேட்) லிமிடெட் அண்மையில் மது வரித்திணைக்களத்துக்கு தமது நிலுவைத் தொகையை செலுத்தியுள்ளது.

(ஐ)



# மூன்றரை கோடி ரூபா பெறுமதியான மற்றுமொரு சொகுசு வாகனம் மீட்பு

கொழும்பு, நவ. 13

தங்காலையில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் மூன்றரை கோடி ரூபா பெறுமதியான லான்ட் குஷரூஸர் ரக சொகுசு ஜீப் வாகனமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனமானது தங்காலை காவல் பிரிவுக்குட்பட்ட விதரந்தெனிய பிரதேசத்தில் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் பதிவு செய்துள்ளதாக காவல்துறையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஜீப் வாகனத்தின் தற்போதைய உரிமையாளரான எம்பிலிபிட்டிய பல்லேகம பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் சட்டத்தரணி ஊடாக மாத்தறை காவல்நிலையத்தில் சரணடைந்துள்ளார். இதையடுத்து, கைது செய்யப்பட்டுள்ள அவர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

மேலும், இந்த வாகனத்தை களுத்துறை பிரதேசத்தில் உள்ள அமைச்சரின் சகோதரர் ஒருவரால் குறித்த வர்த்தகருக்கு விற்பனை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையின் டொலரில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றம்




கொழும்பு, நவ. 13

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 6.46 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

செப்டம்பர் 2020க்குப் பிறகு உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகளின் அளவு 6 பில்லியன்டொலர்களைத்தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், செப்டம்பர் 2024 இல் 5.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அறிவிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ இருப்பு சொத்துக்களின் அளவு ஒக்டோபர் 2024 இறுதிக்குள் 6.46 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது உத்தியோகபூர்வகையிருப்புசொத்துக்களில் 7.9 வீதம் கணிசமான அதிகரிப்பு என மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் முக்கிய அங்கமான அந்நிய செலாவணி கையிருப்பு கடந்த ஒக்டோபரில் 7.3 சதவீதம் அதிகரித்து 6.38 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

குறித்த தொகையானது, 2024 செப்டம்பரில் 5.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதத்தில் மத்திய வங்கியின் தங்க கையிருப்பு 5.8 வீதத்தால் 42 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களில்சீன மக்கள் வங்கியின் அந்நிய செலாவணி வசதியும் அடங்கும், இது சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமன் என்றும் கூறப்படுகிறது.

(ஐ)



# நாட்டு மக்களுக்கு தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள எச்சரிக்கை

கொழும்பு, நவ. 13

2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளை காலை ஆரம்பமாகவுள்ளது.

காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கும் வாக்குப்பதிவு மாலை 4.00 மணி வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அனைத்து பொதுமக்களிடமும் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்களித்த பின்னரும் வாக்கு எண்ணிக்கையின் போதும் வீட்டிலேயே இருக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்குச்சாவடிக்கு அருகில் அல்லது நெடுஞ்சாலைகளில் இருக்க நிற்பதை முற்றாக தவிர்க்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக தொலைக்காட்சி அல்லது பெரிய திரைகளைப் பயன்படுத்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும், முடிவுகள் அறிவிக்கப்படும்போது பட்டாசு கொளுத்துவதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதுபோன்ற கூட்டங்கள் சட்டவிரோதமானது என்று கருதப்படுவதால், பாதுகாப்புப் படையினர் அத்தகைய குழுக்களைக் கலைக்கலாம் அல்லது கைது செய்யலாம் என்பதால், அனைத்து பொதுமக்களும் இதுபோன்ற கூட்டங்களைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஐ)

## யாழ்ப்பாணத்தில் அதிரடியாக கைது செய்யப்பட்ட வேட்பாளர்

கொழும்பு, நவ. 13

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக களம் இறங்கியுள்ள ஒருவர் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து 49 வயதான சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவர் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குருநகரை சேர்ந்த குறித்த வேட்பாளர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஒருவரை ஏமாற்றி 5 இலட்சம் ஷரூபா நிதி மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு காவல்துறையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## வில்லைகளாக வயிற்றினுள் எடுத்துவந்த கொக்கேய்ன் போதைப்பொருள் மீட்பு!

### - கட்டுநாயக்காவில் வைத்து வெளிநாட்டவர் கைது -



கொழும்பு, நவ 13

கொக்கேய்ன் ரக போதைப் பொருளை வயிற்றினுள்வைத்துக்கடத்திய வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. மாத்திரைகளாக்கப்பட்ட கொக்கேய்ன் வில்லைகளை விழுங்கிக் கொண்டு வந்த சியேரா லியோன் நாட்டைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரையே கட்டுநாயக்காவில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து 56 கொக்கேய்ன் வில்லைகள் மீட்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 4 கோடி ஆகும் என இலங்கைச் சுங்கத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-07)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# இந்திய - இலங்கை உறவில் ஏற்படும் விரிசல் தொடர்ந்து கைதாகும் இந்திய மீனவர்கள்!

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வருவதை வலியுறுத்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்திய மீன்பிடி படகுகள் இலங்கை கடற்பரப்பில் வேட்டையாடுவதாகவும், வெளிநாட்டு மீன்பிடி படகுகளின் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளை கட்டுப்படுத்துவதற்காக அவர்களின் கடற்படை கப்பல்கள் தங்கள் கடற்பகுதியில் வழக்கமான ரோந்து மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இலங்கை கடற்படை கூறுகிறது.

இந்த ஆண்டு இதுவரை 66 இந்திய மீன்பிடி படகுகளையும் 497 இந்திய மீனவர்களையும் இலங்கை நாட்டின் கடற்பரப்பில் வைத்திருந்ததாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

மீனவர்கள் பிரச்சினை இந்தியா-இலங்கை உறவுகளில் ஒரு புள்ளியாக உள்ளது. ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் மீனவர்கள் மற்றவரின் கடற்பகுதியில் கடக்கிறார்கள்.



தென்னிந்திய மாநிலமான தமிழ்நாடு மற்றும் இலங்கையின் வடக்குப் பகுதியைப் பிரிக்கும் நீர்நிலையான குறுகிய பாக் ஜலசந்தியில் மீன்பிடி உரிமைகள் மற்றும் பிரதேசத்தை உள்ளடக்கிய நீண்டகால மற்றும் சிக்கலான பிரச்சனை இதுவாகும்.

அந்தக் கடிதத்தில், நவம்பர் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 12ஆம் திகதி செவ்வாய்கிழமை ஆகிய இரு சம்பவங்களில் தமிழகத்தைச் சேர்ந்த மொத்தம் 35 மீனவர்கள் மற்றும் அவர்களது 4 படகுகள் இலங்கை அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து மு.க.ஸ்டாலின் குறிப பிட்டுள்ளார்.

“இந்த கைதுகள் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பது மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பங்களுக்கு பெரும் துயரத்தையும் ஏற்படுத்துகின்றன,” என்று அவர் தெரிவித்துள்ளார்.

சமீப நாட்களில், நாடுகடந்த கடல்சார் குற்றங்களை எதிர்த்துப் போராடுவது மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்காக இந்தியா மற்றும் இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு முகமைகள் சந்தித்து வருகின்றன.

போதைப்பொருள் கடத்தல், கடல் மாசுபாடு, கடற்படையினரின்பாதுகாப்பு, சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது, திறனை மேம்படுத்தும் திட்டங்கள் மற்றும் பிற கூட்டு ஏற்பாடுகள் உள்ளிட்ட கடல்சார் சவால்களை கூட்டாக எதிர்கொள்ள இரு கடலோர காவல்படைகளின் உறுதிப்பாட்டை இந்த சந்திப்பு எடுத்துக்காட்டியது.

இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளின் மூத்த அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற 34வது இந்தியா மற்றும் இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படை சர்வதேச கடல் எல்லைக் கோடு) கூட்டத்திற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு கடலோர காவல்படை தலைமைக்கு இடையிலான சந்திப்பு வந்துள்ளது.

இந்த சந்திப்பு 2024 நவம்பர் 6 ஆம் திகதி பால்க் விரிகுடாவில் இலங்கை கடற்படைக் கப்பலான ளுடுளே விஜயபா/ஹவில் நடைபெற்றது.

பாக்வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடாவில் கடல் பாதுகாப்பு, மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நிகழ்நேர தகவல்தொடர்புக்கு மீனவர்களின் பதிலை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தரப்பு பிரதிநிதிகளும் சிறப்பு கவனம் செலுத்தி விவாதங்களை நடத்தினர்.

நாட்டின் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக பிரசாரம் செய்த ஜனாதிபதி அனுரகுமார திஸ ாநாயக்க, இலங்கைத் தமிழர்கள் வாழும் வடக்குப் பகுதியில் உள்ள கடல் வளங்களை இந்திய மீனவர்கள் அழிப்பதாகக் குற்றம் சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய உரையின் போது, இவ்வாறான கடல்வளங்கள் சுரண்டப்படாமல் இருப்பதை தமது அரசாங்கம் உறுதி செய்யும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும், இப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகவும், விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

அவர் போதைப்பொருள் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினையைத் தொட்டு, கடுமையான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2024 இல் வெளியிடப்பெற்றது.